(High-power Committee))-க்கு பரிந்துரை செய்யப்படும். உயர் அதிகாரக் குழு தகுதி பெற்றவர்கள் குறித்து இறுதியாக முடிவெடுக்கும். இவ்வாறு தேர்ந்தெடுக்கப்படும் ஏழைத் தமிழறிஞர்கள் மாதமொன்றுக்கு ரூ. 100 வீதம் உதவித் தொகை பெற்று பயனடைவர்.

திரு. கு. மா. பாலசுப்பிரமணியம்: இதுவரையில் ஐந்து புலவர்களுக்கு மட்டும் உதவித் தொகை வழங்கப்பட்டதாகச் சொன்னார்கள். அதிலும் முதல் மாதம் வழங்கப்பட்டதாகவும் அடுத்த மாதங்கள் தொடர்ந்து வழங்கப்படவில்லை என்றும் அறிகிறேன். தொடர்ந்து வழங்க உத்தரவு இடப்படுமா? அந்த ஐந்து பேர் யார் யார்? இன்னும் 50 பேருக்கு வழங்குவதாகத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. மற்ற 45 பேர்களைப் பூர்த்தி செய்வதற்கு ஏதாவது கால கட்டம் உண்டா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: உறுப்பினர் அவர்கள் ஒரு மாதம் தான் தரப்பட்டிருப்பதாகவும் மேலும் தொடர்ந்து தருவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டுமென்றும் கூறினார்கள். நடவடிக்கை எடுக்கப்படும். தொடர்ந்து தருவதற்கான அடிப்படையில்தான் தரப்பட்டிருக்கின்றன.

1. மயிலை திரு. சீனி வெங்கடசாமி, சென்னை.
2. கவிஞர் சுரதா, சென்னை.
3. திரு. தியாகராஜன்.
4. திரு. ஏகாம்பரம்.
5. திரு. கே. ஜி. ராஜு.

மற்றவர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டு விரைவில் உதவி பெறுவார்கள்.

Headmasters of Middle Schools.

*233 *Q.*—THIRU P. R. THOMAS (on behalf of THIRU G. SWAMINATHAN): Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(*a*) whether it is a fact that G.O. Ms. No. 1219, Rural Development and Local Administration, dated 18-7-77 is not applicable to the Headmasters of Municipal Middle Schools, whereas it is applicable to their counter-parts in Panchayat Union Middle Schools; and

(b) if so, the reason therefor?

நடுநிலைப்பள்ளிகளின் தலைமையாசிரியர்கள்.

திரு. பி. ஆர். தாமஸ் (திரு. ஜி. சுவாமிநாதன் சார்பில்): மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 18-7-1977 ஆம் நாளிட்ட ஊர் வளர்ச்சி—உள்ளாட்சித் துறையின் 1219 ஆம் எண்ணுள்ள அரசாணை, ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளிகளின் (Middle Schools) தலைமை ஆசிரியர்களுக்குப் பொருந்துகையில் நகராட்சி நடுநிலைப் பள்ளிகளின் தலைமையாசிரியர்களுக்குப் பொருந்தவில்லை என்பது உண்மையா?

(இ) ஆம் எனில், அதற்கான காரணம் என்ன?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: ஊராட்சி ஒன்றியப் பணியாளர்களுக்கான முன்னுரிமை விதிமுறைகளை கருத்தில் கொண்டு 18-7-1977 தேதியிட்ட அரசாணை நிலை எண். 1219 வெளியிடப்பட்டுள்ளது. நகராட்சிப் பள்ளி ஆசிரியர்களுக்கும் இதேபோன்ற நடைமுறையை அமுல்படுத்தத் தக்கதான ஒரு ஆணையை வெளியிடும் கருத்து அரசின் பரிசீலனையில் உள்ளது.

Alagappan Nagar Residents' Association.

* 234 *Q.*—THIRU P. R. THOMAS (on behalf of THIRU D. SANTOSHAM): Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(*a*) whether representations have been received from the Alagappan Nagar Residents' Association (i) requesting permission to secede from the Madurai Corporation and (ii) to create a separate Panchayat ;

(*b*) if so, the reasons therefor ; and

(*c*) the action taken thereon?

அழகப்பன் நகர் குடியிருப்போர் சங்கம்.

திரு. பி. ஆர். தாமஸ் (திரு. டி. சந்தோஷம் சார்பில்): மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) அழகப்பன் நகர் குடியிருப்போர் சங்கத்திடமிருந்து (i) மதுரை மாநகராட்சியிலிருந்து விலகுவதற்கு அனுமதி வேண்டியும்,